**தேதி :** 29.01.2026 **SC.No. :** 259/2022 PW :1 சேகனா

**(1, 3, 4, எதிரிகள் சிறையிலிருந்து ஆஜர்படுத்தப்படவில்லை. இதர எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நாங்கள் எல்லாரும் ஒரு ஜீப்பில் தான் சென்றோம். எதிரிகளை நிலையத்திற்கு ஜீப்பில் தான் அழைத்து வந்தோம். அந்த ஜீப் எந்த வகையானது என்று எனக்கு ஞாபகமில்லை. காவல்நிலைய ஜீப்பில் 12 நபர்கள் செல்ல முடியாது என்றால் சரியல்ல. எதிரிகளை காவல்நிலையத்திற்கு அழைத்து வந்து பொய் வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. 1ம் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>3, 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

பாக்கெட் டைரியை பராமரிப்பது வழக்கம் என்றால் சரிதான். ஆய்வளார் பாக்கெட் டைரியை கேட்கவில்லை. யார், யார் எந்தெந்த வாகனத்தில் சென்றார்கள் என்று ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை, தனி அறிக்கையிலும் குறிப்பிடவில்லை. தனி அறிக்கையை நான் கைப்பட எழுதினேன். ஆய்வாளர் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை. தனி அறிக்கையில் பாழடைந்த கட்டடத்தில் எத்தனை அறைகள் இருந்ததாக குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். 2 இருசக்கரவாகனங்களின் உரிமையாளர்கள் யார் என்று நான் எதிரிகளிடம் விசாரிக்கவில்லை. எந்த எதிரி எந்த வாகனத்தில் வந்தார் என்று நான் குறிப்பிட்டு தனி அறிக்கையில் சொல்லவில்லை.

அரிவாள், கம்பி ஆகியவற்றின் நீளம், அகலம் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை. எதிரிகளிடமிருந்து கைப்பற்றிய பைக்கை எவ்வாறு

காவல்நிலையம் கொண்டு வந்தோம் என்று தனிஅறிக்கையில் குறிப்பிடவில்லை. தனி நபரிடம் கையெழுத்து வாங்காததற்கு என்ன காரணம் என்று குறிப்பிடவில்லை.

நான் சொன்ன நாள், நேரத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், தனி அறிக்கை எதுவும் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவயிடத்திலிருந்து சான்று பொருட்கள் எதையும் நான் கைப்பற்றவில்லை என்றாலும், இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட சான்றுபொருட்களுக்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மீது வேறு வழக்குகள் எங்கள் காவல்நிலையத்தில் இருந்ததா? என்று எனக்கு ஞாபகமில்லை. புள்ளிவிபரக்கணக்கிற்காக பொய்யாக இந்த வழக்கு போடப்பட்டு, குண்டர் தடுப்புச்சட்டத்தின் கீழ் எதிரிகளை கைது செய்ய ஏதுவாக போடப்பட்டது என்றால் சரியல்ல.

<u>5 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சம்பவ காலக்கட்டத்தில் தென்காசி காவல்நிலையத்தில் குற்றப்பிரிவு காவலராக நான் பணிபுரியவில்லை என்றால் சரிதான். தென்காசி சட்ட ஒழுங்கு இன்ஸ்பெக்டர் தான் ரோந்து போகச் சொன்னார். தனி அறிக்கை குற்றப்பிரிவு காவல் ஆய்வாளரிடம் கொடுத்தோம். சம்பவநேரத்தில் வாக்கி–டாக்கி என்னிடம் இருந்தது. எதிரிகளை சம்பவயிடத்தில் பார்த்தவுடன் காவல்நிலையத்திற்கு தகவல் சொல்லவில்லை. நான் சம்பவயிடத்திற்கு சொன்ன நாளில் செல்லவில்லை என்றால் சரியல்ல. எந்தெந்த எதிரி முன்னுக்கு பின் முரணாக எந்த முகவரியை சொன்னார் என்று எனக்கு ஞாபகமில்லை. எதிரிகளை சம்பவயிடத்தில் வைத்து விசாரித்தேன். மொத்தமாக எதிரிகளை விசாரிக்க ஒரு மணி நேரம் ஆகியிருக்கும். பைக் எந்த இடத்தில் நின்றது என்று தனிஅறிக்கையில் குறிப்பிட்டு

சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் பேசிக்கொண்டிருந்த இடத்திற்கும், பைக் நின்றிருந்த இடத்திற்கும் 5 கி.மீ தூரம் இருக்கும். காம்பவுண்ட்டிற்கு எதிரே வெளியே புதர் இருந்தது.

எதிரிகள் காம்பவுண்ட்டிற்குள் மண்டபத்திற்குள் புதரில் நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். அதை சுற்றி திறந்தவெளி என்றால் சரிதான். எங்களை பார்த்தவுடன் எதிரிகள் சிதறி ஓடினார்கள் என்றால் சரிதான். நான் எந்தெந்த எதிரிகளை பிடித்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை. அன்றைய தினம் சம்பவயிடத்திற்கு வருவதற்கு முன்பு எந்தெந்த இடங்களில் ரோந்து சென்றோம் என்றால் தென்காசி ஹவுசிங் போர்டு, குத்துக்கல்வலசை, தென்காசி புதிய பஸ்ஸ்டாண்ட் ஆகிய இடங்களில் சென்றோம். பைக்கை எவ்வாறு காவல்நிலையத்திற்கு கொண்டு வந்தோம் என்று எனக்கு ஞாபகமில்லை. தனி அறிக்கையில் உள்ள கையொப்பத்திற்கும், எழுதப்பட்டுள்ளவைகளுக்கும் இங்க் வேறுபட்டுள்ளது என்றால் சரியல்ல.

தனிஅறிக்கையை நான் எழுதவில்லை என்றால் சரியல்ல. பைக்கிலிருந்து சொத்துக்களை யார் எடுத்தார் என்றால் எல்லோரும் சேர்ந்து எடுத்தோம். நான் ஆய்வாளர் விசாரணை செய்தபோது, சிறிய பாறை கம்பி, ஆணி பிடுங்கும் கம்பி ஆகியவை பைக்கிற்கு கீழே தரையில் கிடந்ததாக சொல்லியுள்ளேன். பைக்கில் கட்டி வைக்கப்பட்டிருந்ததாக தனிஅறிக்கையில் குறிப்பிடவில்லை. ஜீப்பை யார் ஓட்டி வந்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. ஜீப்பை ஓட்டி வந்தவர் சம்பவயிடத்திற்கு வந்தாரா? என்றால் வந்தார். 5 வது எதிரிக்கும், இந்த சம்பவத்திற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல.

(இதர எதிரிகளின் குறுக்கு விசாரணையானது, 5ம் எதிரியின் குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.)

**<u>மறுவிசாரணை</u> –** இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.03 17:27:34 +0530